# சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி

(தன்னாட்சி)

ரஹ்மத் நகர், திருநெல்வேலி – 627 011

(தேசியத் தர மதிப்பீட்டுக் கல்விக்குழுவின் மறுமதிப்பீட்டில் 3.40/4.00 மதிப்பெண்ணோடு 'A' மதிப்பீடு அளிக்கப்பட்டது; சர்வதேசத் தரச் சான்றிதழ் ISO : 9001:2008 பெற்றது.)




பல்கலைக்கழக நிதிநல்கைக்குழுவின் தன்னாட்சி நிதியில் தமிழ்த்துறை நடத்தும்

## தமிழ் இலக்கியத்தில் தன்னம்பிக்கைச் சிந்தனைகள்

தேசியக் கருத்தரங்க ஆய்வுக்கோவை

# தன்னம்பிக்கைத்தமிழ்

## தமிழ்த்துறை வெளியீடு

27.09.2016

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | தன்னம்பிக்கைத் தமிழ் |
| பொருள் | : | தமிழ் இலக்கியத்தில் தன்னம்பிக்கைச் சிந்தனை தொடர்பான கட்டுரைகள். |
| பதிப்பாசிரியர் | : | முனைவர்.ச.மகாதேவன்<br>தமிழ்த்துறைத் தலைவர் |
| இணைப்பதிப்பாசிரியர்கள் | : | திரு.அ.மு.அயூப்கான்<br>இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை<br>முனைவர் அ.சே.சேக்சிந்தா<br>உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை<br>திரு.ஜெ.குமார்<br>உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை |
| பதிப்பு | : | செப்டம்பர் 2016 |
| உரிமை | : | தமிழ்த்துறை,<br>சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி (தன்னாட்சி) |
| ISBN | : | 938597756-3 |
| மொழி | : | தமிழ் |
| தாள், அளவு | : | காப்பியர், |
| பக்கங்கள் | : | 109 |
| விலை | : | ரூ.170/– |
| வெளியீடு | : | ஷான்லக்ஸ் பதிப்பகம்<br>61/66, வி.பி.காம்ப்ளக்ஸ், டி.பி.கே.மெயின் ரோடு<br>மதுரை |
| கணினி அச்சாக்கம் | : | கா.மானேந்தியப்பன்<br>காசி கணினிக் கலையகம்<br>41, தெற்குக் கடைவீதி, பாளையங்கோட்டை<br>கைபேசி : 9443614556 |

# திருக்குடும்பம் காட்டும் தன்னம்பிக்கை

முனைவர் இரா.ஏஞ்சல்,
தமிழ் உயராய்வு மையம்,
பாத்திமாக் கல்லூரி, மதுரை – 18.

உலகில் பிறக்கும் நாம் ஒவ்வொருவரும் பல்லாண்டுகள் வாழ்வோம் என்ற நம்பிக்கையில் தான் வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த நம்பிக்கையை முதன் முதலில் நமக்குத் தருபவள் தாயே! குழந்தையைத் தாய் தன் வயிற்றில் சுமக்கும் போதே அவளை அறிந்தோ அறியாமலோ தன்னம்பிக்கை உணர்வை ஊட்டுகிறாள் என்பதை மறுப்பதற்கில்லை. தாயைப் போலப் பிள்ளை நூலைப் போலச் சேலை எனும் வழக்கு தோன்ற இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். ஏனெனில் தாய் தன் குழந்தை வயிற்றில் இருக்கும் போதே உலகையும் உறவையும் அடையாளம் காட்டி நம்பிக்கை விதையை விதைக்கச் செய்கிறாள்.

**"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே**
**அவர் நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும் அன்னை வளர்ப்பதிலே"**

எனும் பாடல் வரிகளிலும் கூடப் 'பெற்றோர் வளர்ப்பதிலே' எனக் கவிஞன் குறிப்பிடவில்லை. மாறாக அன்னை வளர்ப்பதிலே என்று தான் குறிப்பிடுகிறான். கவிஞர் கண்ணதாசன் படைப்பான இயேசுகாவியத்தில் அன்னை மரியாளாம் கன்னி மரியாள் தன்னம்பிக்கைச் சிந்தனையுடன் தான் இருந்ததோடு தன்குடும்பத்தையும் நம்பிக்கையின் பாத்திரமாக மாற்றுகிறாள் என்பதையும் சூசையும் குறித்து இக் கட்டுரை விதந்தோதுகிறது.

## தெய்வ நம்பிக்கை தரும் தன்னம்பிக்கை

மரியாளும் சரி அவருடைய கணவர் சூசையும் சரி இல்லற விருப்பற்றவராய்த் துறவறப் பற்றுடையோராய் வாழ விரும்புகின்றனர். ஆனால் இறைத்திட்டமோ இருவரும் கடவுளின் மகன் இயேசுவின் வளரப்புப் பெற்றோராய் இருக்க வேண்டும் என்பதாய் அமைகிறது. இச் சூழலில் கன்னி மரியாளிடம் வானதூதர் தோன்றி,

**" அம்மையே நல்ல செய்தி!**
**ஆண்டவர் குமாரன் உந்தன்**
**செம்மைசேர் மகனாய்த் தோன்றும்**
**சிறப்பினை அடையக் காண்பாய்!**
**இம்மையில் மறுமை காட்டும்**
**இறையவர் குமாரன் தன்னை**
**தம்மரும் மகனாய்க் காணும்**
**தவம் உந்தன் தவமே அன்றோ!** (இயேசு காவியம் ப.11)

என்ற உடனேயே இறைத் திட்டத்தை ஏற்றுக் கொள்கிறாள். இதற்குக் காரணம் அவள் கொண்டிருந்த தெய்வ நம்பிக்கையே!

தான் வணங்கும் தெய்வம் தனக்குத் துன்பம் தரக் கூடிய, தன்னால் ஏற்றுக் கொள்ள முடியாத எதையும் தனக்குத் தராது என்று இறைவனிடம் கொண்டிருந்த ஆழமான தெய்வநம்பிக்கையே மரியாளின் தன்னம்பிக்கையாக உருப் பெறுகிறது.